**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073059

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் கன்னியாகுமரி   PS: காவல்நிலையம் VE&AC நாகர்கோவில்   Year ஆண்டு 2020   FIR No. மு.த.அ. எண் 02/20   Date நாள் 14.02.2020

2. (i) Act சட்டம்: CrPC   Sections பிரிவுகள்: 102 CrPC
   (ii) Act சட்டம்: PC ACT 1988 (as amended in 2018)   Sections பிரிவுகள்: 7 of the PC Act 1988 (as amended in 2018)
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 14.02.20   Date from : நாள் முதல் 13.00hrs   Date to : நாள் வரை 16.00hrs
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2020   Time : நேரம் 17.30hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   3 கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி   மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடம், நாகர்கோவில்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   திரு. A.V. மூர்த்தி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர்,   (g) Address : முகவரி திருநெல்வேலி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. S. குமுதா
   மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், சமூக பாதுகாப்பு துறை, நாகர்கோவில்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   – இல்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது, இன்று 14.02.2020 ம் தேதி மாலை 17.30 மணிக்கு துணைக் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, நாகர்கோவில் - கோ. மதியழகன் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு. A.N. மூர்த்தி அவர்கள் நேரில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், அவரது செயல்முறை நடவடிக்கை நாள் 14.02.2020, பணம் ரூ. 1,35,800/-, மற்றும் ஆவணங்கள் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டார். அந்த மனு விபரம் பின் வருமாறு — Contd..,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ப.93 ராம. கு.ப. பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

அ.ந. மூர்த்தி
14/2/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14/2/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.02.2020.

Name: பெயர் G. மதியழகன்,
Rank: நிலை DSP ..... No. எண் ..........

VSAC,
நாகர்கோவில்

முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி பக்கம்....3

அனுப்புநர் அ.வ.மூர்த்தி, ஆய்வுகுழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, கன்னியாகுமரி மாவட்டம். அய்யா, நான் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுகுழு அலுவலராக பணியாற்றி வருகிறேன். இன்று 14.02.2020 காலை 12.00 மணியளவில் நான் மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகத்தில் அலுவலக பணி தொடர்பாக இருந்த போது நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு நாகர்கோவில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குழந்தைகள் காப்பகத்தின் அனுமதியை புதுப்பிக்க லஞ்சம் பெற்று வருவதாக இரகசிய தகவல் கிடைத்திருப்பதாகவும் அதனடிப்படையில் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளின்படி என்னுடைய தலைமையில் லஞ்ச ஒழிப்பு துறையினருடன் சேர்ந்து மேற்படி மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தின் மூன்றாம் தளத்தில் உள்ள சமூகபாதுகாப்புதுறை மாவட்ட குழந்தைகள் பாது காப்பு அலுவலர் அலுவலகத்தை 13.00 மணிமுதல் 16.00 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மாவட்ட குழந்தைகள் பாது காப்பு அலுவலர் திருமதி குமுதா அவர்களின் அறையை அய்வு செய்தபோது அவரது முன்பிருந்த மேஜையின் மேல் St.Vincent De paul Home for Children செயலாளரின் 14.2.2020 தேதியிட்ட மேற்படி ஹோமின் பதிவை புதுப்பிக்க CTS சான்று கேட்டு கொடுத்த மனு இருந்தது. மேலும் அவரது இடது புறம் இருந்த சிறிய பெஞ்சில் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் குமுதாவின் கறுப்பு நிற கைப்பை இருந்தது. அந்த கைப்பையில் இரண்டு பிரவுண் கவர்களில் மொத்தம் ரூபாய் 1,35,800/- இருந்தது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் இந்த பணம் Childrens home களின் பதிவை புதுப்பிப்பதற்கு CTS சான்று வழங்க லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூபாய் 1,35,800/- மற்றும் CTS சான்று கோரிய மனு ஆகியவை கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக இன்று 14.2.2020 செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கையை இத்துடன் இணைத்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபர் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் 14/2/2020 அ.வ.மூர்த்தி மாவட்ட ஆய்வுகுழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி.

Sir, Received the complaint on 14.02.2020 at 17.30 hrs along with Proceedings, documents and seized amount Rs.1,35,800/- and registered a case in Nagercoil V&AC Cr.No.2/2020 u/s 102 Cr.P.C r/w 7 of the PC Act 1988 (as amended in 2018). Signed 14/02/2020 (G.MATHIALAGAN) DSP, V&AC, Ngl.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வு குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை : 14-02-2020ம் தேதி பகல் 13.30 மணியளவில் நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தின் மூன்றாவது தளத்தில் உள்ள சமூக பாதுகாப்புத் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தில் வைத்து கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு. முன்னிலை: 1)திரு.A.V.மூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். திருநெல்வேலி. 2)திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 3)திருமதி.C.சிவசங்கரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தில் மூன்றாம் தளத்தில் உள்ள சமூக பாதுகாப்புத் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவிலில் உள்ள குழந்தைகள் காப்பகத்தின் அனுமதியை புதுப்பிக்க வருபவர்களிடம் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் இன்று 14.02.2020-ம் தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தில் மூன்றாம் தளத்தில் உள்ள சமூக பாதுகாப்புத் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவிலில் வந்து திடீர் சோதனை செய்யப்பட்டது. மேற்படி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தின் மூன்றாவது தளத்தில் தென்புறம் மாவட்ட திட்ட அலுவலர் (ICDS) அலுவலகத்திற்கு எதிரே வடக்கு பார்த்து அமைந்துள்ளது. அறையின் தென்புறத்தில் ஜன்னல் அருகே வடக்கு பார்த்து குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.S.குமுதா அமர்ந்திருந்தார். அவரிடம் ஆய்வு குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பணம்

ஏதும் வைத்துள்ளாரா என்று கேட்டபோது அவர் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று சொன்னார். அவருக்கு முன் பெரிய மர மேஜையின்மேல் கண்ணாடி போட்ட மேஜை ஒன்று இருந்தது. அந்த மேஜையை சோதனை செய்தபோது மேஜையின் இடது புறத்தில் செல்லம்கோணம் St.Vincent De Paul Home for Children செயலாளரின் 14.02.2020 தேதியிட்ட மேற்படி ஹோமின் பதிவை புதுப்பிக்க CTS சான்று கேட்டு கொடுத்த மனு இருந்தது. மேற்படி மனு பற்றி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.S.குமுதா கேட்டபோது அவர் மேற்படி ஹோமில் இருந்து இன்று மனு கொடுத்துவிட்டு சென்றதாக தெரிவித்தார். அவருக்கு இடது புறம் மேற்படி மேஜையின் நீட்சியுடன் கூடிய சிறிய பெஞ்ச் இருந்தது. அதன்மேல் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதா அவர்களின் DAVID JONES PARIS என்று சில்வரில் பொறிக்கப்பட்ட கறுப்பு நிற கைப்பை இருந்தது. அந்த கைப்பையை சோதனை செய்தபோது அதில் இரண்டு பிரவுன் கலர் கவர்களில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு கவரில் "No.85800, To The Child Protection Officer, The Child Protection Unit, Nagercoil, From Deepthi Children's Home, Kaliyal" என்று எழுதப்பட்டு அதனுள் ரூ.85,800/- (2000X42=84,000, 500X3=1,500, 100X3=300)ம், எதுவும் எழுதப்படாத மற்றொரு பிரவுண் கலர் கவரில் ரூ.50,000/- (ரூ.500X100=50,000)ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதாவிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் ஏதும் சொல்லவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,35,800/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப் பட்டது. மேலும் அவரது கைப்பையை சோதனை செய்த போது அதில் இருந்த மணிபர்சில் ரூ.780/- இருந்தது. மேற்படி பணம் பற்றி குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதாவிடம் கேட்டபோது அவர் தனது சொந்தப்பணம் செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.780/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டது. மேஜை மேல் இருந்த செல்லம்கோணம் St.Vincent De Paul Home for Children செயலாளரின் 14.02.2020 தேதியிட்ட மனு அசல் தொடர் நடவடிக்கைக்கு தேவைப்படும் என்பதால் அதனை நகல் எடுத்து அத்தாட்சி செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்தபோது வேறு பணம் ஏதும் இல்லை. அதன்பின்பு குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அறையின் மேற்கு பக்கத்தில் உள்ள அலுவலகத்தை சோதனை செய்யப்பட்டது. அந்த அறையின் நுழைந்ததும் வலது புறத்தில் உள்ள Legal cum Probation Officer பதவியானது காலியிடமாக உள்ளது என்று நிறுவனம் சாரா பாதுகாப்பு அலுவலர் திருமதி.

பியூலா பெல் ஜனகா தெரிவித்தார். மேற்படி இருக்கைக்கு மேல்புறம் நிறுவனம் சார்ந்த பாதுகாப்பு அலுவலர் பணியிடமும் காலியிடமாக இருக்கிறது என்று தெரிவித்தார். மேற்படி இருக்கைக்கு தென்பக்கம் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த புறத்தொடர்பு பணியாளர் திரு.ஆனந்த ஆபிரகாம் என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.910/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவர் தனது சொந்தப்பணம் அடிக்கடி வெளியில் செல்ல வேண்டியிருப்பதால் செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.910/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டது. மேற்படி இருக்கைக்கு தென்பக்கம் கணக்காளர் இருக்கை இருந்தது. கணக்காளர் திருமதி.ஆன்றோ எஸ்கலின் ஷீபா என்பவர் விடுப்பில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நிறுவனம் சாரா பாதுகாப்பு அலுவலர் திருமதி.பியூலா பெல் ஜனகா என்பவர் இருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.1250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவர் தனது சொந்தப்பணம் மகள் பிறந்தநாள் துணி எடுக்க வைத்திருப்பதாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1250/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம் ஆற்றுப்படுத்துனர் திருமதி.மஞ்சு Field-க்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம் Assistant cum Data Entry Operator விஜய ஸ்ரீ என்பவர் இருந்தார். அவர் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று சொன்னார். மேற்படி இருக்கைக்கு கிழக்கு பக்கம் Data Analysor திரு.ராஜேஷ் குமார் இருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.1250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவர் தனது அம்மாவுக்கு மருந்து வாங்க வைத்திருப்பதாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1250/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையின் வடக்கு கிழக்கு பக்கத்தில் ஆவண அறை உள்ளது. அலுவலகத்தின் வடக்கு பக்கத்தில் இரண்டு சமூக பணியாளர் இருக்கை இருந்தது. இரண்டு பேரும் Field-க்கு வெளியே சென்றிருப்பதாக தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தை சோதனை செய்தபோது வேறு பணம் ஏதும் இல்லை. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதா என்பவரை விசாரித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் இந்த பணம் இன்று குழந்தைகள் பாதுகாப்பு மையத்தில் இருந்து வந்தவர்கள் அவர்களது ஹோம் பதிவை புதுப்பிக்க Child Track System சான்று பெறுவதற்காக மாவட்ட குழந்தைகள்

பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதாவிற்கு கொடுத்திருக்கலாம் என கருதி மொத்த பணம் ரூ.1,35,800/- இந்த செயல் முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.குமுதாவிடம் அவரது பணிநியமன ஆணையை கேட்டபோது அவர் Pr.No.3236/SCPS/2015 dated 12/12/2019 தேதியிட்ட Proceedings of the Secretary/Commissioner, Tamilnadu State Protection Society, Department of Social Defence, Chennai-10 எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றப்பட்டது. மேலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தை சோதனை செய்ததில் அரசு உத்தரவுபடி அனைத்து அரசு அலுவலகங்களிலும் பொது மக்கள் பார்வையில் படும்படி லஞ்சஒழிப்பு விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் லஞ்ச புகார் குறித்து புகார் செய்வதற்கு லஞ்சஒழிப்பு துறை சென்னை மற்றும் நாகர்கோவில் பிரிவு அலுவலக முகவரியோ குறிப்பிட்டு போர்டு எதுவும் வைக்கப்படவில்லை. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அறையில் வைத்து மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் இன்று 14.02.2020-ம் தேதி பிற்பகல் 16.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

The original FIR, Complaint, Proceedings of the Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi and Kanyakumari Districts @ Tirunelveli, were sent to the Honourable Chief Judicial Magistrate cum Special Judge Court, Kanyakumari District @ Nagercoil and copies sent to the concerned higher officials.

[signature] 14/02/2020.

(G.MATHI ALAGAN)
DSP, V&AC,
Nagercoil.